**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 166/2025**

திருமதி.சுதா (D.W. –1) **21.01.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்னுடைய பாட்டி பாப்பாமாளுக்கு மூன்று மகன்கள் மற்றும் மூன்று மகள்கள் என்றால் சரி. அதில் ஒரு மகள் என்னுடைய தாயார் தற்சமயம் உயிருடன் இல்லை என்றால் சரி. என்னுடைய பாட்டி உயிருடன் இருந்த சமயத்தில் அவருடைய சொத்துக்களை உயில் ஆவணம் மூலம் அவருடைய மகன்களுக்கு பிரித்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரி. அது தற்போது தான் எனக்கு தெரியும். என்னுடைய பாட்டிக்கு உயில் எவ்வாறு ஏற்படுத்த வேண்டும் என்ற விவரங்கள் தெரியும் என்றால் சரி. என்னுடைய பாட்டி எந்த வருடம் உயில் ஆவணம் ஏற்படுத்தினார் என்றால் எனக்குத் தெரியாது அவர் இறந்த பிறகு உயில் எழுதியதாக தெரிய வந்தது.

2. என்னுடைய பாட்டி உயிருடன் இருந்தபோது எத்தனை உயில் ஆவணங்கள் ஏற்படுத்தி இருந்தார் என்றால் மூன்று உயில்கள் ஏற்படுத்தியிருந்தார். அதன் பிறகு தற்போது ஒரு உயில் இருப்பதாக கூறுகிறார்கள். நான்காவதாக எழுதிய உயில் தான் எனக்குத் தெரியும். நான்காவது உயிலின் அசல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் இல்லை. என் மாமா துரைசாமியிடம் அசல் உயிலாவனம் உள்ளது. உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய

முடியுமா என்றால் என்னால் முடியாது. நீதிமன்றத்தில் இருந்து சம்மன் அனுப்பினால் உயில் ஆவணத்தை துரைசாமி முன்னிலைப்படுத்துவார்.

3. இந்த வழக்கு என்னுடைய சகோதரரின் குடும்பத்தார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ஆமாம். என்னுடைய பாட்டி ஏற்படுத்திய எல்லா உயில்களிலும் எல்லோருக்கும் பாகம் கொடுத்து ஏற்படுத்தி உள்ளார் என்றால் சரி. தாவா சொத்துக்கள் என்னுடைய பாட்டிக்கு எப்படி பாத்தியம் என்றால் அவருடைய சுயசம்பாத்திய சொத்துக்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் 1997 ஆம் வருடம் என்னுடைய பாட்டி ஏற்படுத்திய உயில் ஆவணம் என்றால் எனக்குத் தெரியவில்லை. அந்த உயில் ஆவணத்தில் என்னுடைய பாட்டியின் மூன்று மகன்கள் மற்றும் இரண்டு மகள்கள் எனக்கும் என்னுடைய சகோதரருக்கும் சொத்துக்களை பிரித்து உயிலாவனும் ஏற்படுத்தி உள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. 1997 ஆம் வருடம் என்னுடைய பாட்டியின் வயது என்ன என்றால் 70 வயது.

4. எனக்கு மட்டும் தாவா சொத்துக்களை பாத்தியப்படுத்தி என்னுடைய பாட்டி ஏற்படுத்திய உயில் எந்த வருடத்துடையது என்றால் 2012 ஆம் வருடம் ஏற்படுத்தினார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் உயில் ஆவணம் 2012 ஆம் வருடம் என்னுடைய பாட்டி ஏற்படுத்தியது என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த உயில் ஆவணம் ஏற்பட்டபோது நானும் என்னுடைய மாமா துரைசாமியும் பதிவு அலுவலகத்திற்கு சென்று இருந்தோம் என்றால் எனக்குத் தெரியாது நான் போகவில்லை. உயில் ஆவணம் எங்கு வைத்திருந்தார்கள் என்றால் பாட்டி அவருடைய வீட்டில் தான் வைத்திருந்தார். 2012 ஆம் வருடம் ஏற்படுத்தியதாக சொல்லும் உயில் ஆவணம் மோசடியாக நானும் என்னுடைய மாமாவும் ஏற்படுத்தி உள்ளோம் என்றால் தவறு. அதனால்

தான் அந்த உயில் ஆவணத்தில் தரப்பினர்களின் வயது தவறாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உண்மையிலேயே பாப்பம்மாள் 2012 ஆம் வருடம் உயிலை ஏற்படுத்தியிருந்தால் எல்லோருடைய வயதையும் சரியாக குறிப்பிட்டு இருப்பார் என்றால் சரியல்ல. உயில் சரியாகத்தான் உள்ளது.

5. 2012 ஆம் வருடத்தில் ஆவணத்தில் என்னுடைய பாட்டி பாப்பம்மாளின் வயது 82 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வயதை தவறாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. முதல்வாதியின் கணவர் செந்தில்குமார், ராஜேந்திரன் ஆகியோர் பெயரை காழ்ப்புணர்ச்சியினால் நானும் என்னுடைய மாமாவும் அவர்கள் பெயரில் சொத்துக்களை ஏற்படுத்தாமல் உயிலை மோசடியாக ஏற்படுத்தி உள்ளோம் என்றால் தவறு. ராஜேந்திரனின் நடத்தை சரியில்லை செந்தில்குமாரின் நடத்தை சரியில்லை என்பதால் உயிலில் அவர்கள் பெயர் இல்லை.

6. அவர்கள் நடத்தை சரியில்லாததால் தான் உயில் ஆவணம் ஏற்படுத்தவில்லை. செந்தில்குமார் வழிப்பறி வழக்குகளில் சிறைக்குச் சென்றுள்ளார். பாட்டியிடம் இருந்தும் பணம் எடுத்துள்ளார். செந்தில்குமார் சிறைச்சாலைக்கு சென்றதைப் பொறுத்து அதற்கு உரிய குற்றவியல் வழக்கு விபர ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. செந்தில்குமார் எந்த ஒரு குற்ற வழக்குகளிலும் ஈடுபட்டதில்லை. அவர்கள் பெயரில் சொத்துக்கள் ஏற்படக்கூடாது என்பதற்காக பொய்யாக தற்சமயம் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. 1997 ஆம் வருடம் ஏற்பட்ட உயிலில் என்னுடைய பாட்டி செந்தில்குமார் எனக்கும் என் சகோதரருக்கும் சொத்துக்களை பாகமாக கொடுத்துள்ளார் என்றால் சரி.

7. 2010 ஆம் வருடம் என்னுடைய பாட்டி ஏற்படுத்தியத்திலும் மூன்று பேருக்கும் சொத்துக்களை பிரித்து கொடுத்து எழுதியுள்ளார் என்றால் அப்போது

தெரியாது. தற்சமயம் தெரிந்து கொண்டேன். 1997 மற்றும் 2010ல் மூன்று பேருக்கு சொத்துக்களை கொடுத்து உயில் ஏற்படுத்திய பிறகு என்னுடைய பாட்டி 2012 ஆம் வருடம் உயில் ஏற்படுத்தியிருந்தால் அதிலும் மூன்று பேருக்கு சொத்துக்களை கொடுத்திருப்பார் என்றால் தவறு. என்னுடைய பாட்டியின் வயது அதிகமாக இருந்த காரணத்தாலும் அவருடைய மறதி ஆகியவற்றை பயன்படுத்தி மோசடியாக நாங்கள் 2012 ஆம் வருடம் உயிலை ஏற்படுத்திக் கொண்டுள்ளோம் என்றால் தவறு.

மேலும் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கைெயொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.01.21 17:53:00 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.